# அரசு அலுவலர்களுக்கு 'திராவிட மாடல் அரசு' எப்போதும் பக்க பலமாக இருக்கும்!

## வருவாய்த் துறை அலுவலர் சங்க வைர விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஆக.4–**

**சென்னை, சேப்பாக்கம், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க வைர விழா 16–ஆம் மாநில மாநாடு, கலைவாணர் அரங்கத்தில், நேற்று நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**



விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

தொடர்ந்து மூன்று நாட்களாக திருச்சி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகள் என எல்லாவற்றையும் முடித்துவிட்டு, நேற்று இரவு 12 மணிக்குத்தான் நான் சென்னைக்கு வந்து சேர்ந்தேன்.

'இந்த நிகழ்ச்சிக்கு வர முடியுமா, வர முடியாதா?' என்ற நிலை இருந்தது. இருந்தாலும், இது மிக மிக முக்கியமான நிகழ்ச்சி. இதில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கி இருக்கிறீர்கள். எனவே, நிச்சயமாகக் கலந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் இங்கு வந்து உங்களை எல்லாம் சந்திக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

இதை `வைர விழா மாநாடு' என்று சொல்வதை விட, இதை `கோரிக்கை வைக்கிற மாநாடு' என்று கூடச் சொல்லலாம். அவ்வளவு கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள்.

முதலில், தமிழ்நாடு வருவாய் அலுவலர் சங்கத்தின் 16-வது மாநில மாநாட்டில் நான் பங்கேற்க வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ள மாண்புமிகு அமைச்சர் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் அவர்களுக்கும், இந்தச் சங்கத்தின் பொறுப்பாளர்களுக்கும் என் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### சங்க வைர விழா!

1964–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் தற்போது வைர விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அதற்கு என் சிறப்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஓர் அமைப்பாக இருந்தாலும், சங்கமாக இருந்தாலும், கட்சியாக இருந்தாலும் அதை, தொடர்ந்து அறுபது ஆண்டுகள் நடத்துவது என்பதே மிக மிக அரிதான ஒரு விஷயம்.

60 ஆண்டுகள் இருப்பது மட்டுமல்ல; அந்தச் சங்கம் இன்னும் வலிமையோடும் இளமையோடும் புத்துணர்ச்சியோடும் இருக்கிறது என்பதற்கு இந்த மாநாடு ஒரு சாட்சி. அதற்காக இந்தச் சங்கத்தின் நிர்வாகிகளைத் தனியாகவே பாராட்டியாக வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஓர் அமைப்பை வலுவாக நடத்துவது எப்படி என்று நாங்கள் எல்லாம் உங்களிடத்தில்தான் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், அமைப்பை நடத்துபவர்களுக்குத்தான் தெரியும், அதில் உள்ள சிரமங்கள், கஷ்டங்கள், நஷ்டங்கள் எல்லாம்..!

அந்த வகையில் பார்த்தால், இப்போது நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓர் அமைப்பை எப்படி துடிப்போடு வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்று நமக்கெல்லாம் வழிகாட்டியாகச் சொல்லிக் கொடுத்துச் சென்றிருக்கிறார்.

### ஒடுக்குமுறைகள்!

கலைஞர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம், எமர்ஜென்சியைச் சந்தித்திருக்கிறது. ஒன்றிய அரசின் பல ஒடுக்கு முறைகளைச் சந்தித்திருக்கிறது. இப்போதும் சந்தித்துக் கொண்டிருக்கிறது. தேர்தலில் வெற்றியையும் சந்தித்திருக்கிறது. தோல்வியையும் சந்தித்திருக்கிறது. ஆனால், எல்லாவற்றையும் துணிச்சலோடு எதிர்கொண்டு கழகத்தை மீண்டும் மீண்டும் ஆட்சியில் அமர்த்தியவர்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதற்குத் துணை நின்றவர்கள் அரசு ஊழியர்களாகிய நீங்கள்தான்..!

கழகத்துக்கு வலுவான ஒரு கட்டமைப்பையும், தெளிவான கொள்கைகளையும் உருவாக்கிக் கொடுத்துவிட்டுத்தான் கலைஞர் அவர்கள் சென்றிருக்கிறார். கலைஞர் வழியில் வந்த நம் முதலமைச்சர் அவர்களும், இன்றைக்கு நம் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் நம் அரசையும் துடிப்போடு வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தனிமனிதர்களை விட, ஓர் அமைப்பு மிக மிக முக்கியமான ஒன்று.

ஓர் அமைப்பாக இருந்தால்தான் நம் உரிமைகளைக் காப்பாற்ற முடியும். நம் உரிமைகளைப் போராடிப் பெற முடியும். அந்த வகையில், பார்த்தால் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் மிக மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

### 'தாய்த்துறை'!

நம் திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை அரசுக்கும் பொது மக்களுக்கும் பாலமாக இருப்பது வருவாய்த்துறை அலுவலர்களாகிய நீங்கள்தான். அதை யாராலும் மறுக்கவும் மறக்கவும் முடியாது. வருவாய்த் துறையை அரசின் எல்லா துறைகளுக்கும் `தாய்த் துறை' என்று கூடச் சொல்வார்கள். பொதுமக்களின் அன்றாட வாழ்வு சிறப்பாக நடைபெறத் தேவையான அனைத்து வசதிகளையும் உருவாக்குதல், அவற்றைக் காத்தல், பராமரித்தல் ஆகிய பணிகளை வருவாய்த்துறை அலுவலர்களாகிய நீங்கள்தான் மிக மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

ஏழை எளியவர்களின் நலன், விவசாயிகளின் நலன், தொழிலாளர் நலன், மகளிர் நலன் என்ற அரசின் எந்த ஒரு மக்கள் நலத்திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டங்களை எல்லாம் வெற்றிகரமாகச்செயல்படுத்தவேண்டுமானால், அதற்கு வருவாய்த் துறை அலுவலர்களாகிய உங்களின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டும்தான் அதைச் செய்ய முடியும்.

### மக்கள் நலத்திட்டங்கள்!

ஓர் அரசு எந்த அளவிற்கு மக்கள் நலத்திட்டங்களை அதிகமாகச் செயல்படுத்துகிறதோ அந்த அளவிற்கு வருவாய்த் துறை அலுவலர்களுக்குக் கூடுதல் வேலை இருக்கும். அதனால்தான், இந்த ஆட்சியில் உங்களுக்குக் கூடுதல் வேலை. அத்துடன் கூடுதலாக இப்போதெல்லாம் அடிக்கடி இயற்கைப் பேரிடர்களும் நேரிடுகின்றன. இது போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் எல்லாம், அரசுக்கும் மக்களுக்கும் உதவக் கூடியவர்களாக இருப்பது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களாகிய நீங்கள்தான். எனவே உங்களின் ஒத்துழைப்பு இந்த அரசுக்கு மிக மிகத் தேவையான ஒன்றாக இருக்கிறது.

இங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்திருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களையும், அவர்கள் வசிக்கிற மறுவாழ்வு முகாம்களையும் வருவாய் அலுவலர்களாகிய நீங்கள்தான் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள்.

### முதல்வரின் முகவரி!

இப்போது நம் `திராவிட மாடல்' அரசை நடத்தும் நமது முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்க வேண்டும் என்று `முதல்வரின் முகவரி', `மக்களுடன் முதல்வர்' போன்ற எண்ணற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். இன்றைக்கு அந்தத் திட்டங்கள் எல்லாம் மக்களிடம் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கின்றன என்றால் அதற்கு உங்களின் ஒத்துழைப்பும் உழைப்பும்தான் காரணம்.

அதுமட்டுமல்ல. இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டுகிற வகையில் `கலைஞர் மகளிர் உரிமை தொகை' திட்டத்தை கடந்த செப்டம்பர் மாதம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னது போல் தொடங்கி வைத்தார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் சென்று சேர்கிறது என்றால், அதற்குப் பின்னால் வருவாய்த்துறை அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள் ஆகிய உங்களின் உழைப்பு முழுக்க முழுக்க இருக்கின்றது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் செயல்படுத்துகிற சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அமைச்சர் என்ற முறையில் அந்தத் திட்டத்தின் செயலாக்கத்திற்காக, வெற்றிக்காக உழைத்த உங்கள் அத்தனைப் பேருக்கும் மீண்டும் மீண்டும் எனது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **இப்போது நம் 'திராவிட மாடல்' அரசை நடத்தும் நமது முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்க வேண்டும் என்று `முதல்வரின் முகவரி', 'மக்களுடன் முதல்வர்' போன்ற எண்ணற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். இன்றைக்கு அந்தத் திட்டங்கள் எல்லாம் மக்களிடம் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கின்றன என்றால் அதற்கு உங்களின் ஒத்துழைப்பும் உழைப்பும்தான் காரணம்.**

### மகிழ்ச்சி எதிரொலிக்கும்!

அரசு அலுவலர்கள், தங்கள் வாழ்வில் மகிழ்ச்சியாக இருந்தால்தான் பொதுமக்களின் வாழ்வில் அந்த மகிழ்ச்சி எதிரொலிக்கும் என்பதுதான் நம் முதலமைச்சரின், திராவிட முன்னேற்றக் கழகத்தின், திராவிட மாடல அரசின் நிலைப்பாடு.

நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சட்டப்பேரவையில் 2000-2001- ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது சட்டமன்றத்தில் பேசியதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

'அரசு அலுவலர் பெறும் சம்பளத்தை எப்படிப் பார்க்க வேண்டும்?' என்று நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அவர் சொல்கிறார், `அரசு ஊழியர்களுக்கான சம்பளத்தை `இவ்வளவு பெரிய தொகை ஏதோ ஒரு தனிப்பட்ட நபருக்குத் தரப்படுகிறது' என்று சொல்லக்கூடாது. அரசு அலுவலர்களுக்குத் தரப்படும் ஊதியத் தொகை என்பது திட்டத்தோடு சேர்ந்து செலவழிக்கப்படுகின்ற தொகை ஆகும். அவர்கள் பாடுபட்டால்தான் திட்டங்கள் வெற்றி பெறும்.

ஒரு திட்டம் என்பது அரசு அலுவலர்களையும் சேர்த்துத்தான். எனவே அரசு அலுவலர்களுக்காகத் தரப்படுகின்ற ஊதியத்தைத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படுகிற தொகையாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

அதுவும் உங்கள் துறையின் பெயரே 'வருவாய்த்துறை'. எனவே உங்களின் கோரிக்கைகள் கண்டிப்பாக முதலமைச்சரிடம் எடுத்துச் செல்லப்படும். அண்ணன் அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர் அவர்கள் சொன்னதைப் போல ஏற்கெனவே உங்களின் 12 கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்பட்டுள்ளன.

மீதமிருக்கும் 3 கோரிக்கைகளையும் நிச்சயம் முதலமைச்சரின் பார்வைக்கு எடுத்துச் சென்று, வெகு விரைவில் செய்து கொடுப்போம் என்ற வாக்குறுதியை நான் கொடுக்கிறேன்.

### வேலை நிறுத்தப் போராட்டம்!

இதை நான் சொல்வதற்குக் காரணம், கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு, நீங்கள் எல்லாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டீர்கள். அந்த பயத்தினால் சொல்லவில்லை. அப்போதுகூட நம் வருவாய்த்துறை அமைச்சர் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் அவர்களை அழைத்து, `போராட்டம் செய்து கொண்டிருக்கிற தமிழ்நாடு வருவாய்த் துறையின் அலுவலர் சங்கத்தின் நிர்வாகிகளை அழைத்துப் பேசுங்கள், அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டு உடனே நிறைவேற்றுங்கள்' என்று சொன்னவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

அந்த வகையில்தான் உங்களின் கோரிக்கைகள் தமிழ்நாடு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நீங்களும் உங்களின் போராட்டத்தைத் திரும்பிப் பெற்றீர்கள். உங்களின் போராட்டம் வெற்றி பெற்றது.

### சந்தேகம் வேண்டாம்!

இதுதான், இந்தச் சங்கம் நல்ல நிர்வாகிகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கம் என்பது, நல்ல அனுபவம் வாய்ந்த நிர்வாகிகளைக் கொண்டிருப்பது என்பதை உங்களின் தொடர் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது எங்களுக்குப் புரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு, நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமைந்திருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு, `திராவிட மாடல் அரசு' எப்போதும் அரசு அலுவலர்களுக்குப் பக்க பலமாக இருக்கும். அதில் உங்களுக்கு எள்ளளவும் சந்தேகம் வேண்டாம்.

உங்களின் எல்லா கோரிக்கைகளையும் இந்த அரசு கண்டிப்பாகக் காது கொடுத்துக் கேட்கும். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற, இந்த அரசு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும். அதுவே நம் திராவிட மாடல் அரசின் நோக்கம் என்பதைத் தெரிவித்து, இந்தச் சிறப்பான மாநாட்டில் கலந்து கொண்டு, கலைஞரின் அன்புக்கு என்றும் பாத்திரமான அரசு அலுவலர்களுடன் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்குநன்றிகூறிவிடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த விழாவில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வருவாய் ஆணையரகக் கூடுதல் ஆணையர் முனைவர் நடராஜன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் டேனியல் ஜெயசிங், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் பொதுச்செயலாளர் ஸ்ரீகுமார், மாநாட்டைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கக் கூடிய சங்கத்தின் மாநிலத் தலைவர் எம். பி.முருகையன், சங்கத்தின் பொதுச் செயலாளர் சு.சங்கரலிங்கம், மாநிலப் பொருளாளர் சோமசுந்தரம், மாநில துணைத்தலைவர்கள் குமரேசன், மங்கல பாண்டியன், மணிகண்டன், அர்த்தநாரி, ராஜகோபால், மாநிலச் செயலாளர் பார்த்திபன், அன்பழகன், சுப்பு, தமிழரசன், செந்தில்குமார், ஜோசி, வரவேற்புக் குழுச் செயலாளர் கார்த்திகேயன், சிவஜோதி, இளங்கோவன், சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள், சங்கத்தின் மாவட்ட தலைவர் ராமு உள்பட பலரும் கலந்துகொண்டனர்.





தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கத்தின் 16ஆவது ஆண்டு மாநாடு சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.